## திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு ஜுலை மாதம் 30ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**1)** திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட சீவலப்பேரி சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2019–2020ம் ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 23.01.2019 மற்றும் 18.02.2019 தேதிகளில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் யாரும் கலந்துகொள்ள முன்வரவில்லை. எனவே 05.07.2019–ல் மூன்றாவது முறையாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி, 18.06.2019ம் தேதிய தினபூமி நாளிதழில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக விளம்பரம் வெளியிடப்பட்டது. அதன்படி 05.07.2019 வெள்ளிக்கிழமை அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அதில் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் இரு நபர்கள் கீழ்க்கண்ட விபரப்படி கலந்து கொண்டனர்.

| வ.எண் | பெயர் & முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | S.P.மகாராஜா | ரூ.10,10,000/– |
| 2 | S.P.சாந்தி | ரூ.10,09,000/– |

திரு. S.P.மகாராஜா என்பவர் ஏலத்தில் கேட்டுள்ள கேள்வித் தொகை ரூ.10,10,000/– (ரூபாய் பத்து லட்சத்து பத்தாயிரம் மட்டும்) உச்சகேள்வியாக இருப்பதாலும், மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ.10,00,000/–க்கு கூடுதலாக உள்ளபடியாலும், இந்த உரிம இனத்தினை திரு. S.P.மகாராஜா என்பவருக்கு உரிமம் அனுபவித்துக் கொள்ள மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்.

அலுவலகக் குறிப்பு

மேலே பொருளில் காணும் விவரப்படி, திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட சீவலப்பேரி சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் அரசாணை எண் 78, ந.நி.(ம)கு.வ.துறை, நாள் 25.05.2009–ன்படி ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு 05.07.2019–ல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. பொது எலத்தில் இருவர் கலந்து கொண்டனர். அதில் திரு.S.P.மகாராஜா என்பவர் ரூ.10,00,000/–க்கும் மற்றொருவரான திருமதி.S.P.சாந்தி என்பவர் ரூ.10,09,000/–க்கும் ஏலக்கேள்வி கேட்டனர். எனவே ஏற்கனவே கடந்த இருமுறை நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளாததை கருத்திற்கொண்டும் தற்போது 05.07.2019–ல் நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்ட திரு.S.P.மகாராஜா என்பவர் கேட்ட கேள்வித் தொகை ரூ.10,10,000/– உச்சகேள்வியாகவும், குறுமத்தொகையை விட கூடுதலாகவும் இருப்பதால் அன்னாருக்கு பொது மற்றும் சிறப்பு ஏல அறிக்கை நிபந்தனைகளின்படி மூன்றாண்டு தொகுப்பு கால அளவிற்கு ஒப்படைக்கும் நாள் முதல் அனுபவித்துக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 21

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(அ1/070/2017–பாளை)

---

2) இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 40 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 645 நபர்களை 05.10.2018 முதல் 88 நாட்கள் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் அதற்கான

செலவினத்திற்கும் மாமன்றத் தீர்மானம் எண் 112, நாள் 29.10.2018–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 4 வார்டு அலுவலகங்கள் மற்றும் சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் மேற்படி பணியாளர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேற்படி சுய உதவிக்குழுக்களின் அனுமதி காலம் 29.06.2019 உடன் முடிவடைகின்றது.

எனவே கீழ்க்கண்ட விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் உள்ள கீழ்க்கண்ட 645 நபர்களை 02.07.2019 முதல் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரியவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிக்குழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீ ஜெயம் சுகாதாரப் பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதாரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ பேராட்சி அம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | ஸ்ரீ செல்வ விநாயகர் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 16 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 18 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக்குழு | 18 | பாளை மண்டலம் |
| 20 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 21 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 22 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 23 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 24 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 25 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 26 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 27 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | பாரதி ஆண்கள் சுயஉதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | செந்தமிழ் மகளிர் சுயஉதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப் பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 34 | செம்மொழி சுயஉதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப் பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமயன்பட்டி உரக்கிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

அலுவலகக் குறிப்பு:

அ) உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ஐப் பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.339/–என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண் 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.3) துறை, நாள் 04.05.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் மாதம் ஒன்றுக்கு ரூ.1,25,00,000/– ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் மாதம் ஒன்றுக்கு ரூ.65,59,650/– ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 40 சுய உதவிக் குழுக்களை (645 நபர்கள்) நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.339/– மாவட்ட ஆட்சித்தலைவரின் செ.மு.ஆணை எண் 3550/2017 நாள் 25.07.2017–ன்படி மாமன்ற தீர்மான எண் 3, நாள் 07.06.2019–ன்படி தின ஊதிய அடிப்படையில் 03.04.2019 முதல் 29.06.2019 முடிய 88 நாட்கள் பணிபுரிய அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடைகின்றது. மேலும் 02.07.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 22

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**(எச்2/7560/98–மை.அ)**

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகத்தில், பொதுமக்கள் சேவை மையம் (Call Centre) 01.12.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மையத்தில் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சியின் சேவைகள் தொடர்பான புகார்கள் 1800 425 4656 என்ற Toll Free எண் மூலம் பெறப்பட்டு கணினியில் பதிவு செய்யப்பட்டு நான்கு மண்டல அலுவலகங்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு (குடிநீர், பொதுசுகாதாரம், தெருவிளக்குகள் மற்றும் மாநகராட்சி சேவை தொடர்பான இதர புகார்கள்) அனுப்பப்பட்டு மேற்படி புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் பெறப்பட்ட பின்னர் இப்புகார் குறித்த கோப்பு முடிக்கப்படுகிறது. மேலும் புகார் நிவர்த்தி செய்யப்பட்ட விபரத்தினை சம்பந்தப்பட்ட புகார்தாரருக்கு தெரிவித்து

புகார்தாரர்கள் தெரிவிக்கும் பதிலின் அடிப்படையில் கணினியில் மேற்கண்ட புகார்கள் முடிவு செய்யப்படுகிறது இப்பணி மாமன்றத் தீர்மானம் எண் 33 நாள் 4.6.2018–ன்படி, 01.06.2018 முதல் 31.05.2019 வரையுள்ள ஓராண்டு காலத்திற்கு அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி நிறுவனத்துடன் ரூ.6,53,400 மற்றும் 18% சேவை வரி என்ற தொகைக்கு ஒப்பந்தம் (Acceptance Letter) ஏற்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஓராண்டு ஒப்பந்தக்காலம் 31.05.2019– உடன் முடிவடைந்த நிலையில், மேற்படி பணியினை இன்னும் சில கூடுதல் வசதிகளை மக்களுக்கும் மாநகராட்சிக்கும் ஏற்படுத்தும் வகைகளில் கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளுடன் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொது மக்கள் புகார் சேவை மையத்தில் நுகர்வோர் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மென்பொருளில் கீழ்கண்டவாறு

1. புகார் செய்தவுடன் புகார் அளித்தவருக்கும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலருக்கும் SMS அனுப்பும் வசதி
2. புகாரை Complaint ID மூலம் Open செய்து புகாரின் தற்போதைய நிலை (Status) அறிந்து கொள்ளும் வசதி
3. புகார் செய்தவரின் அலைபேசி எண்ணை கொண்டு அவர் கொடுத்த புகார் அனைத்தையும் பார்க்கும் வசதி
4. மண்டலம் வாரியாக, வார்டு வாரியாக, இனங்கள் வாரியாக அலுவலர்கள் வாரியாக Excel format–ல் PDF- ல் அறிக்கை எடுக்கும் வசதி.

மேற்படி கூடுதல் வசதிகளுடன் இந்தப் பணியினை 01.06.2019 முதல் 31.05.2020 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு தற்போதுள்ள அதே ஆண்டுக் கட்டணம் ரூ.6,53,400 (மற்றும் 18% சேவை வரி) தொகைக்கு M/s அண்ணா யுனிவர்சிட்டி நிறுவனம் மூலம் மேற்படி கட்டணத்தில் 1.6.2019 முதல் 31.05.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தம் (Acceptance Letter) நீட்டித்து வழங்கிட மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

அலுவலகக்குறிப்பு

அ) மேற்படி Toll Free சேவை மூலம், பொதுமக்கள் மாநகராட்சி தொடர்பான தங்களுக்கான குறைபாடுகளை தொலைபேசி மூலம் அவ்வப்போது இலவசமாக பதிவு செய்து குறைபாடுகள் நிவர்த்தி செய்யப் பெறுவதால் மேற்படி சேவையை தொடர்வது குறித்தும், மேலே பொருளில் குறிப்பிட்டுள்ள சில கூடுதல் வசதிகளுடன் இப்பணியினை M/s அண்ணா யுனிவர்சிட்டி, சென்னை நிறுவனத்திற்கு 01.06.2019 முதல் 31.05.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஆண்டுக் கட்டணம் ரூ.6,53,400 (மற்றும் 18% சேவை வரி) தொகைக்கு ஒப்பந்தம் நீட்டித்து வழங்கவும் மாமன்றம் முடிவு செய்யலாம்.

ஆ) அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் மேற்படி பணி 1.6.2019 முதல் M/s அண்ணா யுனிவர்சிட்டி மூலம் மேற்கண்ட விவரப்படி தொடரப்பட்டதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 23

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இடிபி /10452 /2008 )

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலக வளாகத்திலுள்ள பயனற்ற மற்றும் பழுதடைந்த பொருட்களுக்கு 14.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை விபரம் | ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | M.S.K.இரும்புகடை<br>26 10 சிவசக்தி ரோடு<br>திருநெல்வேலி 627 001 | Rs.950/-<br>DD No.122110, Central Bank of India, dated 13.06.2019 | ரூ.1,03,300/– |
| 2 | S.S.P.இரும்பு கடை<br>பழைய இரும்பு மொத்த வியாபாரம்<br>25/L/1 சிவசக்தி தியேட்டர் ரோடு<br>திருநெல்வேலி 627 001 | Rs.950/- DD No.122109, Central Bank of India, dated 13.06.2019 | ரூ.87,800/– |
| 3 | பாண்டியன் பழைய இரும்புகடை<br>நயினாார் ரோடு<br>திருநெல்வேலி டவுண் 627006 | Rs.950/- DD No.122108, Central Bank of India, dated 13.06.2019 | ரூ.97,300/– |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M.S.K.இரும்புகடை, சிவசக்தி ரோடு, திருநெல்வேலி நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது கூடுதலாகவும் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.95,000/–யை விட ரூ.8300/– கூடுதலாக உள்ளதாலும் M.S.K.இரும்புகடை நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்வது குறித்து மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு

தச்சநல்லூர் மண்டல அலுவலக வளாகத்திலுள்ள பயனற்ற மற்றும் பழுதடைந்த பொருட்களுக்கு 14.06.2019 அன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M.S.K.இரும்புகடை, சிவசக்தி ரோடு, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளது. மேலும் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.95000/–யை விட ஒப்பந்தப்புள்ளியில் ரூ.1,03,300/– குறிப்பிட்டுள்ளதாலும் இத்தொகை கூடுதலாக ரூ.8300/– உள்ளதாலும், M.S.K.இரும்புகடை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 24

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/3338/2019)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளில் EMD/FSD தொகை செலுத்தப்பட்டதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எம்.குமார் அவர்களால் 01.04.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| Sl. No | Name of work | 5% RM (Rs.) | Register details |
|---|---|---|---|
| 1 | BT surface at Arul Nagar | 19,500 | 2009-10 P.No.1 |
| 2 | BT surface at NGO B Colony NCR | 5,29,100 | 2010-11/P.No.11 |
| 3 | BT surface Special Road Package 9 | 1,53,000 | 2010-11/P.No.7 |
| 4 | BT surface Special Road Package 3 | 1,91,941 | 2010-11/P.No.6 |
| 5 | BT surface – NCR | 4,91,000 | 2010-11/P.No.10 |
| 6 | BT surface Special Road Package 9 | 1,47,530 | 2010-11/P.No.7 |
| 7 | BT surface Special Road Package 3 | 1,85,260 | 2010-11/P.No.6 |
| 8 | Advance patchwork to roads & BT surface at Perumal East street | 257 | 2009-10/P.No.3 |
| 9 | BT surface Nehruji Nagar | 18,000 | 2011-12/P.No.34 |
| | Total | 17,35,588 | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் EMD/FSD தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி மேற்படி EMD/FSD தொகை ரூ.17,35,588/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.எம்.குமார் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 25

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 180/2009–10– மே.பா)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள EMD தொகையினை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களால் 06.03.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | EMD (Rs) | Register Details |
|---|---|---|---|
| 1 | வா.எண் 1 கோகுல்நகர் தேனீர்குளம் தெற்கு தெருவில் கழிவு நீர் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | 20000 | தச்சை மண்டல காலங்கடந்த வை.தொ.பதிவேடு 2014–15 பக்கம் 1 |
| 2 | நல்மேய்ப்பர் நகர் மதுரை ரோடு கழிவு நீர் ஓடை அமைத்தல் | 20000 | தச்சை மண்டல காலங்கடந்த வை.தொ.பதிவேடு 2013–14 பக்கம் 21 |
| | மொத்தம் | 40000 | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் EMD தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)–ன்படி EMD/FSD தொகை ரூ.40000/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 26

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 36/12–13–தச்சை)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள 5% RM தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் M/s Sun Casting & Alloys நிறுவனத்தால் 07.03.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| Sl.No. | Year | 5% Amount (Rs.) |
|---|---|---|
| 1 | 2011-12 | 17,202 |
| 2 | 2013-14 | 2,46,536 |
| 3 | 2014-15 | 2,39,078 |
| 4 | 2015-16 | 1,98,522 |
| | Total | 7,01,338 |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் 5% RM தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)—ன்படி மேற்படி 5% RM தொகை ரூ.7,01,338/— மட்டும் ஒப்பந்ததாரர் M/s Sun Casting & Alloys நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 27

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 112/13—14)

---

8) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள FSD தொகை செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் M/s NHA Associates நிறுவனத்தால் 29.04.2019ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No | Name of work | FSD (Rs.) | Register details |
|---|---|---|---|
| 1 | IUDM Package III | 75,727 | 2012-13 P.No.26 |
| 2 | BT surface at Thiyagaraja Nagar 7th & 8th North Street in Ward No.19 | 18,250 | 2013-14/I/P.No.37 |
| 3 | TURIP 2013-14 Package II | 3,88,643 | 2013-14/II/P.No.3 |
| 4 | Plastic Road at Pothigai Nagar Ward No.26 | 74,882 | 2012-13/P.No.27 |
| | Total | 5,57,502 | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் FSD தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)—ன்படி EMD/FSD தொகை ரூ.5,57,502/— மட்டும் ஒப்பந்ததாரர் M/s NHA Associates நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 28

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 97/13—14—மே.பா.)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள EMD தொகை ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களால் 08.03.2019—ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| Sl. No | Name of work | EMD (Rs.) | Deposit Register details |
|---|---|---|---|
| 1 | Construction of cover slab and drain in Ward No.34 | 14,250 | MPM Zone 2015-16/P.No.38 |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் EMD தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி EMD தொகை ரூ.14,250/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 29

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 208/2016–17–மே.பா.)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட சீவலப்பேரி ரோடு, ஆடறுப்பு மனை வளாக கடைகளில் உள்புறம் அமைந்துள்ள கடை எண் 17–க்கு 10.07.2019–ல் நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டனர். உச்சகேள்வியாக திரு.P.சண்முகசுந்தரம் என்பவர் மாத குத்தகை தொகை ரூ.3200/–க்கு ஏலம் கேட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. எனவே திரு.P..சண்முகசுந்தரம் என்பவரின் மாத குத்தகை தொகை ரூ.3200/–க்கான ஏலத்தொகையினை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக்குறிப்பு

மேலே பொருளில் காணும் விபரப்படி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட சீவலப்பேரி ரோடு, ஆடறுப்பு மனை வளாக கடைகளில் உள்புறம் அமைந்துள்ள கடை எண் 17–க்கு 10.07.2019–ல் நடைபெற்ற ஏலத்தில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர். அதில் திரு. P.சண்முகசுந்தரம் என்பவர் ரூ.3200/–க்கும், மற்றொருவரான திரு.P.அழகு என்பவர் ரூ.3150/–க்கும் ஏலக்கேள்வி கேட்டனர். எனவே ஏலத்தில் கலந்து கொண்ட திரு. P.சண்முகசுந்தரம் என்பவர் கேட்ட கேள்வித் தொகை ரூ.3200/– உச்சகேள்வியாகவும் குறுமத்தொகை ரூ.2500/–ஐ விட கூடுதலாகவும் இருப்பதால் அன்னாருக்கு பொது மற்றும் சிறப்பு ஏல அறிக்கை நிபந்தனைகளின்படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு மட்டும் (அரசாணை எண் 92, ந.நி.(ம)கு.வ துறை, நாள் 03.07.2007–ன் மீதான வழக்கில் பகரப்படும் நீதிமன்ற இறுதி தீர்ப்புக்கு உட்பட்டு) அனுபவித்துக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 30

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(அ1/7316/2018–பாளை)

---

11) திருநெல்வேலி மாநகராட்சி, நான்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தனிநபர் விசேஷங்களுக்கு உரிய கட்டணம் பெற்றுக் கொண்டு இம்மாநகராட்சிக்குட்பட்ட குடிநீர் டேங்கர் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது இம்மாநகராட்சிக்கான நிதி ஆதாரத்தினை அதிகரிக்கும் வகையிலும், தனிநபர்கள் மற்றும் பொது மக்கள் குடிநீரின் சிக்கனத்தினையும், அதன் அத்தியாவசியத்தினையும் உணர்ந்திடும் வகையில் இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படியான குடிநீர் வாகனங்களுக்கான கட்டணத்தினை நிர்ணயம் செய்யலாம்.

1) 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெரிய குடிநீர் வாகனம் (1 லோடு) – ரூ.1500/–
2) 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறியி குடிநீர் வாகனம் (1 லோடு) – ரூ.500/–

மேற்கண்ட விபரப்படி தனிநபர் விசேஷங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கான திருத்திய குடிநீர் வாகன கட்டணத்தினை 2019–2020ஆம் ஆண்டிற்கான நடப்பாண்டு முதல் நிர்ணயம் செய்து நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

பொருளில் கண்டுள்ளபடி, இம்மாநகராட்சியில் தனிநபர் விசேஷங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கான திருத்திய குடிநீர் வாகன கட்டணத்தினை 2019–2020–ஆம் ஆண்டிற்கான நடப்பு ஆண்டு முதல் நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 31

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ2/4073/19–மை.அ.)

---

12) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டல மீன்சந்தையிலும், அதை சுற்றி மண்டல எல்கைக்குள்ளும் மீன் விற்பனை செய்பவர்களிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம் மற்றும் தரகு வியாபாரம் செய்யும் உரிமஇனத்திற்கு 10.07.2019–ல் நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டனர். உச்ச கேள்வியாக திருM.சங்கரநாராயணன் என்பவர் உரிமத்தொகை ரூ.5,40,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே திருM.சங்கரநாராயணன் என்பவரின் உரிமத்தொகை ரூ.5,40,000/–க்கான ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

மேலே பொருளில் காணும் விபரப்படி, பாளையங்கோட்டை மண்டல மீன்சந்தையிலும், அதை சுற்றி மண்டல எல்கைக்குள்ளும் மீன்விற்பளை செய்பவர்களிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம் மற்றும் தரகு வியாபாரம் செய்யும் உரிமஇனத்திற்கு 10.07.2019–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர். அதில் திரு.V.மதன்குமார் என்பவா ரூ.5,37,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தார். வைப்புத் தொகை செலுத்திய விபரமோ, வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையோ இணைக்கப்படவில்லை. எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்பட்டது. மற்றொருவரான திரு.M.சங்கரநாராயணன் என்பவர் ரூ.5,40,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே இவ்வினத்திற்கு ஏற்கனவே கடந்த 30.01.2019 மற்றும் 27.02.2019 தேதிகளில் இருமுறை ஏலம் விட்டும் ஒருவரும் கலந்து கொள்ளாததாலும், தற்போது ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்ட திரு.M.சங்கரநாராயணன் என்பவர் கேட்ட கேள்வித்தொகை ரூ.5,40,000/– உச்ச கேள்வியாகவும், குறுமத்தொகையை விடக் கூடுதலாகவும் இருப்பதாலும், அன்னாருக்கு பொது மற்றும் சிறப்பு ஏல அறிக்கை நிபந்தனைகளின்படி அரசாணை எண் 78, ந.நி.(ம)கு.வ.துறை, நாள் 25.05.2009–ன்படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 32

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(அ1/6543/2018–மே.பா.)

---

13) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாகவும் திடக்கழிவு மேலாண்மை பணியினை சிறப்புற மேற்கொள்ளும் வகையிலும் கீழ்கண்ட 40 சுயஉதவிக் குழுக்களை சாந்த 645 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி நடைபெற்று வருகின்றது.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள்  சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிக்குழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீ ஜெயம் சுகாதாரப் பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதாரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ பேராட்சி அம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | ஸ்ரீ செல்வ விநாயகர் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 16 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 18 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக்குழு | 18 | பாளை மண்டலம் |
| 20 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 21 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 22 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 23 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 24 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 25 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 26 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 27 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | பாரதி ஆண்கள் சுயஉதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | மங்களவிநாயகர் ஆண்கள்சுயஉதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | செந்தமிழ் மகளிர் சுயஉதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப் பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | செம்மொழி சுயஉதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | காளியம்மன்ஆண்கள் காதாரப் பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமயன்பட்டி உரக்கிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

மேற்கண்ட சுயஉதவிக் குழுகளுக்கு பணி செய்தமைக்கான மாதாந்திர தொகையான நாள் ஒன்றுக்கு ரூபாய் 339/– என கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் M3/16361/2017, நாள் 02.07.2019–ன் படி தின ஊதியமானது 01.04.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள கணக்கிற்கு ரூபாய் 359/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே இம்மாநகராட்சியில் துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மேற்கண்ட 40 சுயஉதவிக் குழுக்களை சார்ந்த பணியாளர்களுக்கு 01.04.2019 முதல் நாள் ஒன்றுக்கு ரூபாய் 359/– என கணக்கிட்டு வழங்கிடவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதிக்கும்.

அலுவலகக்குறிப்பு:

அ) இம்மாநகராட்சியில் துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுயஉதவிக்குழுக்களுக்கு பணி செய்தமைக்கான மாதாந்திர தொகையினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் M3/16361/2017, நாள் 02.07.2019 ன் படி நாள் ஒன்றுக்கு ரூபாய் 339/– லிருந்து ரூபாய் 359/–ஆக 01.04.2019 முதல் கணக்கீட்டு வழங்கிடவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேலும் இப்பொருள் தொடர்பாக அவசர அவசியத்தை கருதி ஆணையாளர் (பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 33

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(எச்2/7560/98)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலசங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலசங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்பரவு பணிகள் மேற்கொள்ளபட்டு வந்தது. தற்போது மேற்படி நல சங்கங்களுடன் மேற்கொள்ளப்;பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ப்பட்டு வருகின்றது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்ப்ட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்கு குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண் 13 நாள்: 28.03.2018–ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுயஉதவிக்குழுக்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண் 5, நாள் 07.06.2019 ன் பிரகாரம் 26.06.2019 உடன் முடிவடைவதால் மேலும் 26.06.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலசங்கமும் பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் மொத்தம் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலசங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்பரவு பணிகள் மேற்கொள்ளபட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்திற் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின் படி சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுயஉதவிக்குழுவும், பாளை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் துப்புரவு பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மாமன்ற தீர்மான எண் 13, நாள் 28.03.2018 ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுயஉதவிக்குழுக்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண் 5, நாள் 07.06.2019 ன் பிரகாரம் 28.03.2019 முதல் 30.06.2019 உடன் முடிவடைவதால் மேலும் 26.06.2019 முதல் 88 நாட்களுக்கு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி அதற்கான செலவினத்திற்கும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு மாமன்ற பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 34

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(எச்2/96/2018)

---

15) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 29, கரீம்நகர் பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 19 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 19 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்தவும், மேலும் புதியதாக 3 எண்ணம் மின்கம்பங்கள் அமைத்து அதில் 3 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும், ஆக மொத்தம் 22 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கான செலவு உத்தேசம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 19 எண்ணம் மின்கம்பங்களுக்கிடையே தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து அதில் 19 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்தவும், புதியதாக மூன்று எண்ணம் மின்கம்பங்கள் அமைத்து அதில் மூன்று எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்தவும் ஆக மொத்தம் 22 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கான உத்தேச செலவு தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 35

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ2/4402/2019–மே.பா.)

---

16) திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19 –ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 5க்கு உட்பட்ட சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை பகுதியில் வணிக மையம் மேம்படுத்தும் பணிக்கு ரூ.5671.00 லட்சத்திற்கு சீர்மிகு நகர உயர்மட்ட திட்ட ஒப்புதல் குழு (Smart City High Powered Project Sanctioning Committee), நாள் 22.11.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 16856/2017/DO-1, நாள் 12.12..2018–ன்படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின் படியும் மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 10/ஸ்மாாட் சிட்டி/ 2018-19/SCM–ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமலர் தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 27.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 30.01.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் M/s.PSK Engineering Construction & Co, Namakkal மற்றும் திருமதி.பி.லெட்சுமி, நாமக்கல் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 04.02.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 21.02.2019 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.PSK Engineering Construction & Co, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திருமதி.பி. லெட்சுமி, நாமக்கல் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited)2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 5–க்குட்பட்ட சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை பகுதியில் வணிக மையம் மேம்படுத்தும் பணி செய்தல் | ரூ.48,20,10,751/- | ரூ.54,57,62,644/- 13.23% மதிப்பீட்டை விட அதிகம் | ரூ.55,54,46,034/- 15.24% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.PSK Engineering Construction & Co, Namakkal நிறுவனத்தின தொகை ரூ.54,57,62,644/– ஆனது மதிப்பீட்டை விட 13.23% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வாா;த்தைக்கு அழைக்க 21.02.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 26.02.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 13.23% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான

விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.PSK Engineering Construction & Co, Namakkal நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ. 50,58,70,283/– ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 26.02.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 28.02.2019 –ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 28.02.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.PSK Engineering Construction & Co, Namakkal நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. 50,58,70,283/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதி;ன்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) மேற்படி, திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19 –ன்; கீழ்;, திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 5–க்குட்பட்ட சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை பகுதியில் வணிக மையம் மேம்படுத்தும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 28.02.2019 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.PSK Engineering Construction & Co, Namakkal நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. 50,58,70,283/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.5671.00 லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–2019ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 36

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ஒ.பு.அ.எண் 10/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2018–19//SCM)

---

17) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி கட்டிடங்களில் மேம்படுத்தும் பணிகள் செய்வதற்கு பணிக்கு ரூ.234.00 லட்சத்திற்கு, திருநெல்வேலி சீர்மிகு நகர மேலாண்மை இயக்குநர் அவர்களால் 31.10..2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 16856/2018/DO-2, நாள் 14.11..2018–ன்படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் முதலாவது அழைப்பில் 19.12.2018 அன்று மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான

ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் 2வது அழைப்பில் 30.1.2019 அன்று மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், (1) திரு.எஸ்.சேதுதுரை மற்றும் (2) திரு.எம்.மாரிதுரை ஆகிய இரு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அந்த இரு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஆவணங்களை இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் தகுதியிழந்ததாக கருதப்பட்டு மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்பட்டன. பின்னர் 3வது அழைப்பில் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 12/ஸ்மார்ட் சிட்டி/2018–19/ SCM–ன்படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் புரட்சி தலைவி நமது அம்மா தமிழ் நாளிதழின் அனைத்துப்பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 06.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 10.07.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.George Engineering Enteprises திருநெல்வேலி மற்றும் (2) M/s.M.J. Industries திருநெல்வேலி ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 10.07.2019 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் M/s.George Engineering Enteprises திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மட்டுமே தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணை மட்டும் 16.07.2019ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.George Engineering Enterprises நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19–ன் கீழ் திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி கட்டிடங்களில் மேம்படுத்தும் பணிகள் செய்தல் | ரூ.2,23,97,234/- | ரூ.2,37,41,214/- 6.00% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு, மேற்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான M/s.George Engineering Enterprises நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,37,41,214/– ஆனது மதிப்பீட்டை விட 6.00% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 16.07.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 20.07.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 6.00% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.George Engineering Enterprises நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.2,35,05,897/– ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 20.07.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 23.07.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு

அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 26.07.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.George Engineering Enterprises நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.2,35,05,897/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி கட்டிடங்களில் மேம்படுத்தும் பணியானது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 26.07.2019 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.George Engineering Enterprises நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.2,35,05,897/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதி;ன்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.234.00 லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகரநிறுவனம் 2018–2019–ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 37

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ஒ.பு.அ.எண் 12/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2018–19/SCM)